

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டை மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில், பேகம் சாகிப் மெயின் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் நேற்று (26.8.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாமன்ற உறுப்பினர் திருமதி வே. கமலா செழியன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடனிருந்தனர்.



சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி 176 வது வார்டுக்கு உட்பட்ட வேளச்சேரி 100 அடி சாலை தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் நடைபெற்றது. இதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு பார்வையிட்டு பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கினார்.. உடன் வேளச்சேரி மேற்கு பகுதி கழகப் பொறுப்பாளர், 176 வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம், வட்ட கழக செயலாளர் கே.என்.தாமோதரன், எஸ்.முருகவேல், த.பார்த்திபன், ஜி.பி.எஸ். பாலசதீஷ், க.பாரதிதாசன், வி.சக்திவேல், அரசு துறை சார்ந்த அதிகாரிகள்,கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டார்!

## பொதுமக்களுடன் கலந்துரையாடி தீர்வுகள் வழங்கினார்!

சென்னை, ஆக.27-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டை பேகம் சாகிப் மெயின் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார்.

பொதுமக்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள், திட்டங்களின் கீழ் பொதுமக்களின் குறைகளை வீட்டிற்கே வந்து கேட்டறிந்து தீர்வு காணும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் ஜூலை 15 முதல் நவம்பர் 2025 வரை அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 10,000 முகாம்கள் நடைபெறவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மட்டுமே வழங்கப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று, விண்ணப்பத்தினை பெற்று, பூர்த்தி செய்து தங்கள் விண்ணப்பத்தினை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறுகின்றன.

நேற்று (26.8.2025) சென்னை சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வார்டு119, ராயப்பேட்டை மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில், பேகம் சாகிப் மெயின் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சமூக நலக்கூடத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை உள்ளிட்ட 13 அரசுத்துறைகள் மூலம் மக்களிடமிருந்து மனுக்கள் பெற்று உரிய பதிவுகளை மேற்கொண்டு அதற்கான ஒப்பமும் வழங்கப்பட்டது. முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், சிறப்பு மருத்துவ முகாமும் நடத்தப்பட்டது.

மேலும் தூய்மை பணியாளர்களுக்கு அரசின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் விவரங்கள், நலத்திட்ட உதவிகளை பெறத்தேவைப்படும் ஆவணங்கள் குறித்த தகவல் தொகுப்பு கையேடு முகாமிற்கு வருகை தந்த தூய்மை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மனுக்களை அளிக்க வந்த பொதுமக்களுடன் கலந்துரையாடி, தீர்வுகளை வழங்கினார். மேலும் இந்த முகாமில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருத்துகள் வழங்கப்படுவதையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாமன்ற உறுப்பினர் திருமதி வே. கமலா செழியன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

### மதுரை வடக்கு மாவட்டம்

## பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் மதுரை வடக்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.செல்வராஜ் அவர்கள் மேலூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், அவரை பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்து, மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஆகஸ்ட் 25 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,
திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
442/5, ராஜா ரைஸ்மில் அருகில்,
வலைச்சேரிபட்டி ரோடு,
கொட்டாம்பட்டி
மதுரை 625 103.அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 26-08-2025.

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

### மின்னணு சாதனங்கள் ஏற்றுமதியில்

# தமிழ்நாடு முதலிடத்தைப் பிடித்தது!

சென்னை, ஆக. 27 –

ஐபோன்கள் ஏற்றுமதியால் மின்னணு சாதனங்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே, தமிழ்நாடு முதலிடத்தை பிடித்துள்ளது.

ஐபோன்கள் ஏற்றுமதியால் மட்டுமே தமிழ்நாட்டின் மின்னணு சாதனங்களின் ஏற்றுமதி மதிப்பு 783% அதிகரித்துள்ளது. 2020 – 2021ல் ரூ.14,565 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மின்னணு சாதன ஏற்றுமதி மதிப்பு 2024 – 2025ல் ரூ.1,28,536 கோடியாக உயர்ந்துள்ளது.

---

### தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் அறிவிப்பு! விருது பெறுபவர்களை

# தாய்க் கழகத்தின் சார்பில் பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

## திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக. 27 -

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. விருது பெறுபவர்களை தாய்க் கழகத்தின் சார்பில் பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தி.மு.க. தலைமை நிலைய அமைப்பு, ஆண்டு தோறும் நடத்தும் 'முப்பெரும் விழா' நிகழ்வில் 'பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது' என்ற விருதுகள் வழங்கப்படும். (அடுத்து அது 'பாவேந்தர் விருது, பேராசிரியர் க. அன்பழகன் விருது, மு.க. ஸ்டாலின் விருது' என்று விரிவாக்கமும் பெற்றது).

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பாவேந்தர், பேராசிரியர், மு.க. ஸ்டாலின் விருதுகளுக்கு இவ்வாண்டு கரூரில்நடைபெறவிருக்கும் முப்பெரும் விழாவில் வழங்க அறிவிக்கப்பட்டுள்ள விருதா ளர்கள் பட்டியல் மிக மிகப் பொருத்தமானது.

கொள்கையாளர்களாக, அக்கொள்கைகளுக்காகக் கஷ்ட, நஷ்டம் ஏற்று, இயக்கத்தில் நீண்ட காலம் பணியாற்றிய தியாகச் செம்மல்களுக்கு விருதுகள் அறிவித்து வாழும் போதே அவர்களைப் பாராட்டிப் பெருமைப்படுத்துவது திராவிட இயக்கத்தின் புகழ் மகுடத்தில் ஒளிரும் முத்துக்களாகும்.

இவ்வாண்டு விருதுக்குரியோராக அறிவிக்கப்பட்டிருப்போர்:

தந்தை பெரியார் விருது கவிஞர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் அண்ணா விருது டாக்டர் சுப. சீத்தாராமன் பாளையங்கோட்டை நகர்மன்ற மேனாள் தலைவர் - கலைஞர் விருது சோ.மா.இராமச்சந்திரன் நூற்றாண்டு கண்டவர், அண்ணாநகர் சட்டப் பேரவைத் தொகுதி மேனாள் உறுப்பினர் பாவேந்தர் விருது குளித்தலை சிவராமன் குளித்தலை ஒன்றியக் குழு மேனாள் தலைவர் - பேராசிரியர் விருது மருதூர் ராமலிங்கம் சட்டப் பேரவை- தி.மு.க. மேனாள் கொறடா மு.க. ஸ்டாலின் விருது பொங்கலூர் நா. பழனிச்சாமி மேனாள் அமைச்சர் கொள்கைப் போராளிகளாகவும், திராவிட இயக்க முத்திரையாளர்களாகவும், தொண்டாலும் சிறந்தவர்களை, தக்காரை அடையாளம் கண்டு இப்படிப் பெருமைப்படுத்தும் தி.மு.க. தலைவர் சகோதரர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு!

விருது பெறவிருக்கும் வேர்களுக்கு நமது பாராட்டும், மகிழ்ச்சியும் கலந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் தாய்க் கழகமான திராவிடர் கழகம் பூரிப்பும், பெருமிதமும் அடைகிறது.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 188 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை, ஆக.27-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக் கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 188 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (26.08.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59 அ, எல்லீஸ் ரோடு,அண்ணா சாலை. 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55ஆ, 1 ஆச்சாரப்பன் தெரு, தாதா முத்தியப்பன் தெரு சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.





இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம். விஜயகுமார், என்.பி. எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே. கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை, டி. சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க.முருகன், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருத்தணி நகரம் சி.எஸ்.ஐ அரசு உதவி பெறும் பள்ளியில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார். உடன் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, நகர மன்ற தலைவர் சரஸ்வதி பூபதி, நகர கழக செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார், நகர்மன்றத் துணைத் தலைவர் ஆ.சாமிராஜ், நகர ஆணையர் பாலசுப்பிரமணியம், ஒன்றிய செயலாளர்கள் பா. ஆர்த்திரவி, கே.ராஜேந்திரன், உள்பட கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் பள்ளி தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் பலர் உள்ளனர்



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகரப்புறங்களில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை மயிலாப்பூர் பள்ளியில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டை பகுதியில் உள்ள ஹோலி ஏஞ்சல் தொடக்கப்பள்ளியில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ காலை உணவு விரிவாக்க திட்டத்தை தொடக்கி வைத்து பள்ளி மாணவ மாணவிகளுடன் அமர்ந்து உணவு அருந்தினார். அப்பொழுது பள்ளி தலைமை ஆசிரியர் ஆசிரியர்கள்மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகள் கழகத் தோழர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.